ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2176/25 - 2020 මැයි මස 23 වැනි සෙනසුරාදා - 2020.05.23

*2176/25 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் நெடுந்தீவு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*நெடுந்தீவு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கட்சி அங்கத்துவம் முடிவுறுத்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், நெடுந்தீவு பிரதேச சபையின் இலக்கம் 04 - நெடுந்தீவு 04 ஆம் வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட பிலிப்பு பற்றிக் றொஷான் என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கை தமிழ் அரசு கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான நெடுந்தீவு பிரதேச சபையின் இலக்கம் 04 - நெடுந்தீவு 04 ஆம் வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக மிக்கேல்பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது, நெடுந்தீவு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான இராஜேந்திரம் கிறிஸ்ரி அமல்ராஜ் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு மிக்கேல்பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பவர் நெடுந்தீவு பிரதேச சபையின் இலக்கம் 04 - நெடுந்தீவு 04 ஆம் வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**இ. கி. அமல்ராஜ்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
நெடுந்தீவு பிரதேச சபை.

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்,*
*2020, மே 22.*

1A - G 32238 — 27 (2020/05) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*